**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073009

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : சென்னை. PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு CSU-I Year ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 3/AC/2019/CC-I Date: நாள் 14.03.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 சென்னை. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.03.19 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.30 Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.03.19 Time : நேரம் 17.30hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 18.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computerised Report

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடமேற்கு, 30km.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. A.ஆனந்த் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அம்மாவாசை
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 13/4/83 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் சிவில் எஸ்டேட் (g) Address : முகவரி எண் 33, அன்னை அஞ்சுகம் நகர், MGR, காலனி, அண்ணா நகர், சென்னை - 600040

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. முருகன் உதவி மின் பொறியாளர், TNEB, கோவில்பதாகை
   2) திரு. மோகன்ராஜ், வணிக ஆய்வாளர், TNEB, கோவில்பதாகை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — தாமதமில்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A Ananth

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Gpushpalatha
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 14/3/19

15. Date & Time of despatch to the court: 14.03.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. PUSHPALATHA
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
VE AC, CSU-I
Chennai-600016

……………… Continuation of Column No.12 of FIR in Cr.No.3/AC/2019/CC-I dated 14.03.2019.

**V&AC, CC-I, Cr.No.3/AC/2019/CC-I, U/s 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act., 2018-FIR details**

சென்னை நகர சிறப்பு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாளராகிய நான், இன்று 14.03.2019 மாலை 17.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது சென்னை-40, அண்ணாநகர், MGR காலணி, எண் 33, அன்னை அஞ்சுகம் நகரில் வசித்து வரும் அம்மாவாசை, மகன் திரு.A.ஆனந்த் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, இது குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநகரத்திற்கு தெரிவித்து அந்த புகார் மனு குறித்து முதல் கட்ட விசாரனை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள கோவில்பதாகை, ஆவடி தமிழ்நாடு மின்சார வாரிய உதவிமின் பொறியாளர் திரு.முருகன் மற்றும் வணிக ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் மற்றும் புகார்தாரர் திரு.ஆனந்த் ஆகியோர்களின் முன்நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 14.03.2019 காலை 08.00 மணிக்கு சென்னை நகர பரிவு-1 குற்ற எண் 3/2019 சட்டபிரிவு 7 (a) ஊழல் தடுப்பு (Amendment) சட்டம் 2018-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விவரம் சென்னை 13.03.2019 அனுப்புநர் திரு.A.ஆனந்த், த/பெ அம்மாவாசை, எண் 33, அன்னை அஞ்சுகம் நகர், MGR காலணி, அண்ணாநகர்,சென்னை-40 பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக தனுஸ்ரீ Homes என்ற பெயரில் கடந்த 8 வருடங்களாக கட்டுமான தொழில் செய்து வருகிறேன். நான் சம்மந்தப்பட்ட நபர்களிடம் ஒப்பந்தம் செய்து பணம் பெற்று வீடு கட்டி ஒப்படைப்பேன். மேலும் அந்த வீட்டிற்கான மின் இணைப்பு மற்றும் இதர வசதிகளை அவர்கள் கேட்டால் செய்து தருவேன். நான் ஆவடி, பூம்பொழில் காலனி, பவானி தெருவில் வசித்து வரும் திருமதி.ருக்மணி அம்மாள் மற்றும் அவரது மகள் திருமதி.சரஸ்வதி அவர்களுடன், அவர்களுடைய Plot No.705, Poompozhil Housing Colony, comprised in old Survey No.706/11A, ஆவடி நகர பட்டா எண் 825 வார்டு சி, பிளாக் எண் 38, புதிய சர்வே எண் 70, கோவில்பதாகை கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்ற இடத்தில் ஒரு கட்டுமான ஒப்பந்தம் 05.09.2018 அன்று ஒப்பந்தம் செய்தேன். அதன்படி அதில் 5 குடியிருப்புகள் இரண்டு மாடியில் கட்டி இருக்கிறேன். தற்போது பணி முடிந்த நிலையில் சம்மந்தப்பட்ட நபர்கள் மின்சார வாரியத்தில் சென்று என்னையே மின் இணைப்பு பெற்றுத்தரும்படி கூறினார்கள். அதன்படி நான் படிவங்களை

சம்மந்தப்பட்ட நபர்களிடம் பூர்த்தி செய்து கையொப்பம் பெற்று ஆவடி, கோவில்பதாகை, உதவி மின் பொறியாளர், திரு.முருகன் அவர்களை பலமுறை சந்திக்க சென்றேன். அவர் அலுவலகத்தில் இல்லாததால் 06.03.2019 அன்று கைபேசியில் தொடர்பு கொண்டு மின் இணைப்பு பற்றி கேட்டேன். அதற்கு அவர் அலுவலகத்தில் வணிக ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் அவர்களை சந்தித்து விண்ணப்பத்தை சமர்பிக்க சொன்னார். அதன்படி நான் மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தை அன்றே திரு.மோகன்ராஜ், வணிக ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். பின்னர் 08.03.2019 அன்று மதியம் உதவி பொறியாளர் திரு.முருகன் மற்றும் வணிக ஆய்வாளர் திரு. மோகன்ராஜ் ஆகியோர் வந்து கட்டிடங்களை ஆய்வு செய்துவிட்டு, உதவி பொறியாளர் முருகன் அவர்கள் மும்முனை இணைப்பு ஒன்றுக்கு சுமராக ரூ.7,200/- Legal Fees என்று கூறினார். அதன்படி அவர் அரசுக்கு கட்ட வேண்டியதாக கூறிய பணம் 6 இணைப்பிற்குறிய பணம் ரூ.43,000/-த்தினை நான் 11.03.2019 அன்று அலுவலகம் சென்று வணிக ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் அவர்களிடம் கொடுத்தேன். அதற்கு அவர் எந்த விதமான ரசீதும் கொடுக்கவில்லை. மேலும் இது தவிர ரூ.40,000/- எனக்கும், உதவி பொறியாளர் திரு.முருகனுக்கும் சேர்த்து தனியாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அவர் கேட்டபணத்தை கொடுத்தால்தான் இந்த விண்ணப்பபடிவம் பதிவு செய்யப்படும் என்று கூறினார். தாங்கள் கேட்ட பணத்தை 14.03.2019 அன்று காலை மின்சார அலுவலகம் வந்து மேற்படி லஞ்சபணம் ரூ.40,000/- எங்களிடம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். எனக்கு லஞ்சமாக பணம் கொடுத்து மின் இணைப்பு பெற விருப்பம் இல்லை. எனவே மின் இணைப்பு பெற என்னிடம், பணம் ரூ.40,000/- லஞ்சமாக கேட்ட உதவி பொறியாளர் திரு.முருகன் மற்றும் வணிக ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.40,000/-த்துடன் வந்துள்ளேன். மேலும், எனது புகார் மனு மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் மேற்க்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கு உடன்படுகிறேன் என்பதை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd.xxx (A.Anand) 13.03.2019. submitted to the court of Hon'ble Chief Judicial Magistrate, Cum special Judge, Thiruvallur Received the complaint on 13.03.2019 at 17.30 hrs made Confidential enquiry registered a case in Cr.No.3/AC/2019/CC-I u/s. 7(a) of the Prevention of Corruption Amendment Act., 2018 at 08.00 hrs on 14.03.2019 sd.xxxxx (G.Pushpalatha) 14.03.2019, Inspector of Police, Vigilance and Anti-Corruption, City Special Unit-I, Chennai-600 016.

G.Pushpalatha 14/3/19

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
City Special Unit-I MKN Road,
Alandur, Chennai - 600 016.
(Near St. Thomas Mount Metro Railway Station)